**சிவகாசி நகர்மன்றம்**
**அவசரக் கூட்டம்**

**நகராட்சி அலுவலகம்.**

**அவசரக்கூட்டம் எண் .** **நாள் :12.05.2021.**

நிகழும் திருவள்ளுவராண்டு 2052 பிலவ வருடம் சித்திரை திங்கள் 29 ஆம் நாள் 2021ம் ஆண்டு மே மாதம் 12ம் தேதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை : திரு. சோ.பார்த்தசாரதி,B.P.T., M.Sc.(Psy).**
**தனி அலுவலர்.**

**பொருள் :**

1. சிவகாசி நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.17 மருதுபாண்டியர் மடத்து கிழக்குத் தெரு மற்றும் வார்டு எண்.7 திருத்தங்கல் ரோடும், கார்னேசன் பள்ளி செல்லும் சாலை சந்திப்பு ஆகிய இரு இடங்களில் பழுதான உடைந்த நிலையில் உள்ள சிறு பாலங்களை அகற்றி புதியதாக சிறுபாலங்கள் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4,00,000/-க்கும், (ரூபாய் நான்கு லட்சம் மட்டும்) மேற்படி செலவுத் தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

   அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

   ந.க.எண் 2872/2021/இ1
   அனுமதிக்கப்பட்டது - மன்ற அனுமதி எண் 1103

2. சிவகாசி நகராட்சி புதிய அலுவலக வளாகத்தில் கட்டிடத்தின் உட்புறத்தில் மேலாளர் அறை, சுகாதார அலுவலர் அறை, வருவாய் அலுவலர் அறை மற்றும் நகரமைப்பு அலுவலர் அறை ஆகியவற்றில் உள்ள சுவர்களில் வர்ண சுவரொட்டிகள் ஒட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1,10,000/-க்கும், (ரூபாய் ஒரு லட்சத்தி பத்தாயிரம் மட்டும்) மேற்படி செலவுத் தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

   அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

   ந.க.எண் 2875/2021/இ1
   அனுமதிக்கப்பட்டது -மன்ற அனுமதி எண் 1104

3. சிவகாசி நகராட்சி புதிய அலுவலக வளாகத்திற்கு முன்புறம் உள்ள சாலையிலிருந்து நகராட்சி அலுவலகத்திற்கு வருவதற்கு இடையில் இரண்டு பாலங்கள் அமைக்கவும், நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் வாகனங்களை நிறுத்துவதற்கு மேற்கூறை அமைக்கவும், அலுவலகப் பணியாளர்களின் வாகனங்களை நிறுத்துவதற்கு மேற்கூறை ( இருசக்கர வாகனம் நிறுத்துமிடம்) அமைக்கவும், மின் இயற்றியை நகராட்சி பழைய அலுவலகத்திலிருந்து புதிய நகராட்சி அலுவலகத்தில் ஜெனரேட்டர் அறையில் மின் இயற்றியை பொருத்துவதற்கும், தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.23,75,000/-க்கும், (ரூபாய் இருபத்தி மூன்று லட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) மேற்படி செலவுத் தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

   அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 2873/2021/இ1
அனுமதிக்கப்பட்டது -மன்ற அனுமதி எண் 1105

4. சிவகாசி நகராட்சி புதிய அலுவலக வளாகத்தில் அலுவலக பயன்பாட்டிற்கும், பாதுகாப்பு கருதியும் அலுவலகத்தினை சுற்றிலும் சுற்று சுவர் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.31,00,000/-க்கும், (ரூபாய் முப்பத்தி ஒரு லட்சம் மட்டும்) மேற்படி செலவுத் தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 2874/2021/இ1
அனுமதிக்கப்பட்டது -மன்ற அனுமதி எண் 1106

5. சிவகாசி நகராட்சி புதிய அலுவலக வளாகத்தில் வெளிப்புறத்தில் பசுமையான புல்வெளி அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1,70,000/-க்கும், (ரூபாய் ஒரு லட்சத்து எழுபதாயிரம் மட்டும்) மேற்படி செலவுத் தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 2876/2021/இ1
அனுமதிக்கப்பட்டது - மன்ற அனுமதி எண் 1107

6. இந்நகராட்சி வார்டு எண்.23, டிரஸ்டி பத்திரகாளியம்மன் 9-ம் திருவிழா பண்டு கட்டிடத்தின் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக புகையிலை கடை தர்ம பண்டு செயலாளர் திரு. ஜெ.ரத்தன் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு, மாவட்ட நீதிமன்றம் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஓ.எஸ்.எண்.17/2011-ன்படி நடைபெற்றது. நகராட்சி சார்பில் இவ் வழக்கில் வழக்கறிஞர் திரு.T. சேக்சுலைமான் B.A.B.L., அவர்கள் ஆஜராகி லோக் அதாலத் மூலம் தீர்ப்புரை பெற்றுக் கொடுத்தமைக்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.5000/- வழங்க கோரியுள்ளார். மேற்படி வழக்கில் ஆஜராகியதற்கும் , வழக்கறிஞர்கட்டணம் ரூ.5000/-ஐ பொது நிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2759/2011/அ2
அனுமதிக்கப்பட்டது - மன்ற அனுமதி எண் 1108

7. இந்நகராட்சி வார்டு எண்.24, புதுரோட்டுத்தெரு, கதவுஎண். 108,108ஏ மற்றும் 108சி-ல் உள்ள கட்டிடங்களுக்கு புதிதாக வரி விதிக்கப்பட்டதை ஆட்சேபனை செய்து திரு.சந்தனமாரியப்பன் என்பவரால் சிவகாசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஓ.எஸ்.எண்.119/2015-ன்படி வழக்கு தொடரப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வந்தது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பில் வழக்கறிஞர் திரு.T. சேக்சுலைமான் B.A.B.L., அவர்கள் ஆஜராகி நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்புரை பெற்றுக் கொடுத்தமைக்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.5000/- வழங்க கோரியுள்ளார். மேற்படி வழக்கில்

ஆஜராகியதற்கும், வழக்கறிஞர் கட்டணம் ரூ.5000/-ஐ பொது நிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.4903/2015/அ1
அனுமதிக்கப்பட்டது - மன்ற அனுமதி எண் 1109

8. சிவகாசி நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்தில் 2021-22-ஆம் நிதி ஆண்டிற்கு தினசரி உணவு வகைகள் தயார் செய்ய தேவையான அரிசியினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், விருதுநகரிலும், தயிர் சாதத்திற்கு தேவையான பால் மற்றும் தயிரினை Virudhunagar District Milk Co-op Producers Union Ltd., Srivilliputhur Dairy / Virudhunagar Chilling Center -லிலும், சாம்பார் சாதத்திற்கு அன்றாடம் தேவையான காய்கறிகள் மற்றும் பலசரக்கு பொருட்களை துறை மூலம் கொள்முதல் செய்யவும், தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை விற்பனை செய்ய அதற்கு தேவையான வில்லைகள் (Token), பதிவேடுகள் மற்றும் ஸ்டேஷனரி சாமான்கள் முதலியவற்றை கொள்முதல் செய்யவும், அம்மா உணவகத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் ஊதியத்தின்படி ஊதியம் மற்றும் E.P.F.(தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி) பங்கினை வழங்கவும், கேஸ் சிலிண்டர் M/s.Shri Jayanthi Aencies,Sivakasi, நிறுவனத்தில் கொள்முதல் செய்யவும், மின்சாரம் மற்றும் இதர செலவினங்களை மேற்கொள்ளவும், இவை அனைத்திற்கும் ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.60,00,000/-(அறுபது லட்சம்)- க்கு செலவு செய்ய அனுமதியும், மேற்படி தொகைகளை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:7724/2014/அ1
அனுமதிக்கப்பட்டது -மன்ற அனுமதி எண் 1110

9. 15 வது நிதிகுழு திட்டத்தின் கீழ் அரசாணை எண்-44 நாள்-24.02.2016-ன் படி சிவகாசி நகராட்சி வெம்பக்கோட்டை தலைமை நீரேற்று நிலையத்தில் சிவகாசிக்கு பம்பிங் நீரேற்றம் செய்வதற்கு புதிய 50HP Squirrel Case மோட்டார்கள் இரண்டு எண்ணம் வாங்கி அதற்குரிய 50 HP Auto Transfornen sterrter புதியது 2 எண்ணம், 50Sqmm காப்பர் பிளைட் கேபிள் 90 மீட்டர் அளவு,புதிய 5HP மோனோ செட் மோட்டர்கள் 4 எண்ணம் வாங்ககி அதற்கு 5HP DOL ஸ்டார்ட்டர்கள் வாங்கி வடிகிணறுகளில் பொருத்தி இயக்கப்பட வேண்டும்.புதிதாக 5HP Vaccum pump Set வாங்கி,அதற்கு 5HP ஸ்டார்-டெல்டா ஸ்டார்ஸ் புதியது வாங்கி 6Sqmm காப்பர் பிளேட் கேபிள் 50 மீட்டர் அளவிற்கு வாங்கி மோட்டாரை பொருத்தி இயக்க வேண்டும். புதிதாக 20HP கம்பரஸ்ஸர் மற்றும் 20HP SqumCase மோட்டார் அதற்குறிய 20HP Star-Delth Starter ஆகியவை புதியவை வாங்கி பொருத்தி இயக்கும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்-1075 நாள்.21.01.2021படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி கடிதம் எண்-26/2021/அ1 நாள்-29.01.2021-ன் பணிக்கு 26.02.2021-ம் தேதியில் மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயா | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|

| | | ரூ.இலட்சத்தில் | | |
|---|---|---|---|---|
| 1 | திரு.S.பாலசுப்பிரமணியன் ஒப்பந்ததாரர் | ரூ.48.00 | ரூ.44,36,900/- | 10.34% கூடுதல் |
| 2 | திரு.K.முருகேசன் ஒப்பந்ததார் சிவகாசி | ரூ.48.00 | ரூ.36,68,450/- | 8.77% குறைவு |

அலுவலகக் குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 8.77% குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.K.முருகேசன்,ஒப்பந்ததாரர், சிவகாசி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மேற்கண்ட பணியினை 15 வது நிதிகுழு திட்டத்தின் கீழ் செய்யவும் மன்ற அனுமதிக்கலாம்.

ந.க.எண்:406/2021/இ2

அனுமதிக்கப்பட்டது -மன்ற அனுமதி எண் 1111

10. 15 வது நிதிகுழு திட்டத்தின் கீழ் அரசாணை எண்-44 நாள்-24.02.22016-ன் படி சிவகாசி நகராட்சி பகுதியில் உள்ளூர் ஆதாரமாக வெம்பக்கோட்டை தலைமை நீர்றேற்று நிலையத்தில் உள்ள பழுதடைந்த 300mm CI பைப்(சுமார் 700மீ) மற்றும் காமராஜர் நீரேற்று நிலையத்தில் உள்ள பழுதடைந்த மின்மோட்டாரை மாற்றி புதிய 30HP மின்மோட்டார் பொருத்தும் பணிக்கு பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்-1075 நாள்.21.01.2021படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி கடிதம் எண்-26/2021/அ1 நாள்-29.01.2021-ன் பணிக்கு 26.02.2021-ம் தேதியில் மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயா | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.S.பாலசுப்பிரமணியன் ஒப்பந்ததாரர் | ரூ.38.00 | ரூ.33,89,729/- | 6.505% கூடுதல் |
| 2 | TG&CO நிறுவனம் உடுமலைபேட்டை | ரூ.38.00 | ரூ.30,22,110/- | 5.045% குறைவு |
| 3 | திரு.K.முருகேசன் ஒப்பந்ததார் சிவகாசி | ரூ.38.00 | ரூ.29,99,760/- | 5.74% குறைவு |

அலுவலகக் குறிப்பு:

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 5.74% குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதிரு.K.முருகேசன்,ஒப்பந்ததாரர், சிவகாசி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மேற்கண்ட பணியினை 15 வது நிதிகுழு திட்டத்தின் கீழ் செய்யவும் மன்ற அனுமதிக்கலாம்.

ந.க.எண்:406/2021/இ2

அனுமதிக்கப்பட்டது -மன்ற அனுமதி எண் 1112

11. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 2021-2022-ம் ஆண்டுக்கு வார்டு எண் 17 முதல் 33 வரை உள்ள பகுதியில் குடியிருக்கும் மக்களுக்கு குடிநீர் கொண்டு செல்லும் குழாய்கள் பதிக்கப்பட்டு 15 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதால் குடிநீர் குழாய்களில் அடிக்கடி வெடுப்புகள் மற்றும் பழுதுகள் ஏற்பட்டு குடிநீர் வெளியேறி வீணாகிறது.எனவே குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதினை உடனடியாக சரிசெய்வதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.7,00,000 (ரூபாய் ஏழு லட்சம் மட்டும்) ஆகும்.இப்பணியினை குடிநீர் நிதியின் கீழ் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : - மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2850/2021/இ2.

அனுமதிக்கப்பட்டது - மன்ற அனுமதி எண் 1113

12. இந்நகராட்சி பகுதிகுட்பட்ட குடிநீர் அல்லாத பிறபயன்பாட்டிற்கு வார்டு 1 முதல் 33 வரை வார்டுகளில் உள்ள சிறுமின்விசை பம்புகள் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேற்படி சிறுமின்விசை பம்புகள் ஆண்டுதோறும் பயன்பாட்டில் உள்ளதால் அதிக அளவில் பழுதாகியுள்ளது .அதனை சரிசெய்யும் பணிக்கு ரூ.2,50,000/-(இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஆகும். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : - மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 2851/2021/இ2.

அனுமதிக்கப்பட்டது - மன்ற அனுமதி எண் 1114

13. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 2021-2022-ம் ஆண்டுக்கு வார்டு எண் 1 முதல் 16 வரை உள்ள பகுதியில் குடியிருக்கும் மக்களுக்கு குடிநீர் கொண்டு செல்லும் வெம்பக்கோட்டை தலைமை நீரேற்றும் நிலையம் மற்றும் நகர் பகுதியில் உள்ள குழாய்கள் பதிக்கப்பட்டு 15 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதால் குடிநீர் குழாய்களில் அடிக்கடி வெடுப்புகள் மற்றும் பழுதுகள் ஏற்பட்டு குடிநீர் வெளியேறி வீணாகிறது.எனவே குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதினை உடனடியாக சரிசெய்வதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9,00,000 (ரூபாய் ஒன்பது லட்சம் மட்டும்) ஆகும்.இப்பணியினை குடிநீர் நிதியின் கீழ் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : - மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 2864/2021/இ2.

அனுமதிக்கப்பட்டது -மன்ற அனுமதி எண் 1115

14. இந்நகராட்சி வார்டு எண் 16, மருதுபாண்டியர் மடத்து தெருவில் புதிதாக வரிவிதிப்பு செய்ய திருமதி.அன்னலட்சுமி என்பவர் விண்ணப்பித்துள்ளார். அன்னாருக்கு புதிதாக வரி விதிப்பு ஏதும் செய்யக்கூடாது என்று திரு.பாலன் என்பவர் சிவகாசி மாவட்ட முனிசிபல் கோர்ட்டில் O.S.No.81/2020ன்படி நகராட்சி ஆணையாளரை 5ம் பிரதி வாதியாக சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் நகராட்சி வழக்கறிஞர் திரு.T.சேக்சுலைமான், B.A., B.L., அவர்கள் ஆஜராகவும், இவ்வழக்கிற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.5000/-ஐ பொது நிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 95/2020/அ1

அனுமதிக்கப்பட்டது - மன்ற அனுமதி எண் 1116

15. சிவகாசி நகராட்சி பொது சுகாதார பிரிவு , தினந்தோறும் சேகரமாகும் 35 டன் குப்பைகளை தரம்பிரித்து மக்கும் / மக்காத குப்பைகளாக பிரிக்கப்படுகிறது. நாள்தோறும் சேகரமாகும் சுமார் 10 டன் INERT குப்பைகள் பாறைப்பட்டி உரக்கிடங்கில் கொட்டப்படுகிறது. மேற்படி உரக்கிடங்கில் BIO MINING பணிகள் நடைபெறுவதால் மேலும் குப்பைகள் சேகரிக்க இடம் இல்லாமல் உள்ளது. எனவே தற்பொழுது நகராட்சி உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை Leveling செய்வதற்கு Hitachi - 200 இயந்திரம் 25 மணி நேரம் பணி செய்ய வேண்டியுள்ளது. நகராட்சி உரக்கிடங்கில் குப்பைகளை ஒதுக்க பயன்படும் Hitachi - 200 இயந்திரம் 25 மணி நேரம் பயன்படுத்துவதற்கு ஆகும் தோராய செலவு ரூ.1,00,000/- ( ரூபாய் ஒரு இலட்சம் மட்டும் )-க்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி செலவீனத்தை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு -15 ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிகள் பொது சுகாதார அவசர அவசியமாக இருப்பதால் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளை தனி அலுவலர் முன் அனுமதி பெற்று உரிய பணிகள் செய்வதையும் மற்றும் அதற்கான செலவீனத்தையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் : 2871 / 2021 / எச்1 )**

அனுமதிக்கப்பட்டது - மன்ற அனுமதி எண் 1117

16. சிவகாசி நகராட்சி பொது சுகாதார பிரிவு, பாறைப்பட்டி நகராட்சி உரக்கிடங்கில் 2015 —— 2016 திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் Windrow Processing Unit நிறுவப்பட்டுள்ளது. மேற்படி இயந்திரம் பணியாளர்கள் பற்றாக்குறையால் இயக்கப்படாமல் உள்ளது. தற்பொழுது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி ஆகியோர்களால் தொடர்ந்து குறிப்பாணைகள் வழங்கி மேற்படி இயந்திரங்கள் இயக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி தினந்தோறும் சேகரமாகும் Fresh Waste குப்பைகளை மேற்படி இயந்திரத்தை பயன்படுத்தி Processing செய்ய 20 பணியாளர்கள் தேவைப்படுகிறது. தேவைப்படும் 20 பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் விருதுநகர் அலுவலக தினக்கூலி ரூ.385/- அடிப்படையில் மூன்று மாத காலத்திற்கு மட்டும் பணிகள் நடைபெற தினக்கூலி, EPF 13 %, ESI 3.25 % நிர்வாக செலவு, சீருடை, பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் இதர செலவீனம் சேர்த்து மொத்தம் ரூ. 9,50,000/- ( ரூபாய் ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும் ) செலவீனத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி பணிகள் நடைபெற மன்றம் அனுமதிக்கலாம்.
2. Windrow Processing Unit இயந்திரம் பயன்படுத்தப்படாமல் இருந்தால் மேற்படி இயந்திரம் பயனற்று விடும் என்பதனால் மேற்படி பணிகள் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.
3. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி ஆணை

வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2870 / 2021 / எச்1 )**
அனுமதிக்கப்பட்டது -மன்ற அனுமதி எண் 1118

17. இந்நகராட்சியில் பணிபுரியும் அம்மா உணவக பணியாளர்கள் மற்றும் பொது சுகாதாரப்பிரிவு டெங்கு பணியாளர்கள் அவர்களிடமிருந்து ஏப்ரல்-2021 முதல் மார்ச்-2022 வரை மாத ஊதியத்தில் பொது வருங்கால வைப்பு நிதிக்காக (EPF) பிடித்தம் செய்யப்பட்ட தொகையை அவரவர் கணக்கில் ஆன்லைனில் வரவு வைக்க EPF கன்சல்டன்ஸி திரு.என்.சிவேஷ் பிரபு என்பவருக்கு கன்சல்டன்ஸி தொகை வழங்க உத்தேச செலவு தொகை ரூ.15,000/-ஐ பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.4692/2016/அ1
அனுமதிக்கப்பட்டது - மன்ற அனுமதி எண் 1119

18. சிவகாசி நகராட்சி சிறப்புச் சாலைத் திட்டம்-2020-2021 சிப்பம்-10-ல் வார்டு எண்.21-ல் ரத்தினம் நகர், மாணிக்க விநாயகர் காலனி மற்றும் கட்டளைப்பட்டி சாலையில் தார்தளம் அமைக்கவும் பணி மற்றும் அய்யப்பன் காலனியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிக்கு ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் செய்வதற்கு 15.02.2021 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டு வருகின்றது. மேற்படி பணியில் அய்யப்பன் காலனியில் மட்டும் பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கு மதிப்பீட்டில் உள்ளது. இதில் கூடுதலாக ரத்தினம் நகரில் நகராட்சி அலுவலகத்திற்கு கிழக்கு மற்றும் வடக்குப் பகுதி சாலையில் பேவர் பிளாக் அமைக்க அவசியமாக உள்ளதால் மேற்படி பணியினை சிறப்புச் சாலைத் திட்டம்-2020-2021 சிப்பம்-10 வழிவகை செய்யப்பட்ட பேவர் பிளாக் சாலை அளவுகளில் கீழ் மேற்படி மதிப்பீட்டுத் தொகைக்கு மிகாமல் இப்பணியினை செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்-2568/2021/இ1
அனுமதிக்கப்பட்டது -மன்ற அனுமதி எண் 1120

19. சிவகாசி நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.25 மேலரதவீதி மற்றும் தெற்கு ரதவீதி சந்திப்பில் வசந்த் அன்கோ முன்புறம் உள்ள மழைநீர் வடிகாலில் இருந்து நெடுஞ்சாலைத்துறை சாலைக்கு குறுக்காக செல்லும் பாலத்தில் அடைப்பு ஏற்பட்டு மேற்படி பாலத்தில் கழிவுநீர் வெளியேற இயலாத நிலையில் உள்ளது. பொதுமக்களின் நலன் கருதி நகராட்சிக்கு சொந்தமான சாலையில் மேலரதவீதி மற்றும் தெற்கு ரதவீதி சந்திப்பிற்கு அருகில் புதியதாக சிறு பாலம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.500,000/-க்கும், (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மேற்படி செலவுத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் /2021/இ1
அனுமதிக்கப்பட்டது -மன்ற அனுமதி எண் 1121

20. சிவகாசி நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்காக மூன்று தளங்கள் உள்ளதால், மூன்று தளங்களுக்கும் அலவலக பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் சென்று வருவதற்கு மின் தூக்கி ( LIFT ) பொருத்துவது அவசிய தேவையாக உள்ளதால் மேற்படி பணியினை செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.16,00,000/-க்கும், (ரூபாய் பதினாறு லட்சம் மட்டும்) மேற்படி செலவுத் தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் /2021/இ1

அனுமதிக்கப்பட்டது -மன்ற அனுமதி எண் 1122

21. மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிவகாசி வழக்கு எண்: E.P.No.37/2012 in E.A.No.28/2019-ன் படி இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணியாற்றி வரும் திரு.சோலையப்பன் மற்றும் திருமதி.பத்திரகாளி தூய்மை பணியாளர் ஆகியோர்களின் ஊதியத்தில் கடன் தொகையை பிடித்தம் செய்து மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிவகாசி அனுப்ப கோரி திரு.காளிராஜன், சிவகாசி என்பவர் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.T.ஷேக் சுலைமான் பி.ஏ.பி.எல். அவர்கள் நகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கினை முடித்து தந்த வகைக்கு வழக்கு கட்டணம் தொகை ரூ.5,000/-ஐ (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும் ) வழக்கறிஞர்க்கு பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 6571/ 2012/ எச்1

அனுமதிக்கப்பட்டது - மன்ற அனுமதி எண் 1123

22. இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா தினசரி காய்கறி மார்க்கெட்டில் உள்ள இருசக்கர வாகன காப்பக உரிமம் குத்தகை காலம் 31.03.2021 உடன் முடிவடைவதால், மறுஏலம் (01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரைய) கோரும் நடவடிக்கைக்கு எதிராக திரு.எஸ்.கருப்பசாமி, 1/176 வேண்டுராயபுரம்,சிவகாசி என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் இடைக்கால தடையாணை உத்தரவு (WMP (MD) No.1265/2021, WP (MD) No.1474/2021) பெற்றுள்ளார். மேற்படி தடையாணை தொடர்பாக, இந்நகராட்சி வழக்கறிஞரிடம் (திரு.செந்தில் குமாரையா,சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் மதுரை கிளை) சட்டக் கருத்துரு பெறுவதற்கும், மேற்படி தடையாணை உத்தரவு தொடர்பான 29.03.2021 வாய்தாவில் நகராடசி சார்பில் ஆஜரானதற்கும், மேலும் மேற்படி வழக்கினை தொடர்ந்து நடத்திட ஆகும் வழக்கின் செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி வழக்கில் ஆஜராகும் பொருட்டு நகராட்சி வழக்கறிஞருக்கு வக்காலத்து கொடுத்து நகராட்சி சார்பாக ஆஜராக கோரியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண் 310/2020/அ4

அனுமதிக்கப்பட்டது - மன்ற அனுமதி எண் 1124

23. இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கடைகள் மற்றும் வணிக வளாகங்களுக்கு வாடகை தொகையில் பிடித்தம் செய்யப்பட்ட சேவை வரித் தொகையினை (GST) ஒவ்வொரு மாதமும் GST கணக்கில் இணையதளத்தில் (online) செலுத்தி அதற்கான GST Return GSTR-3B and GSTR-1 நகராட்சி ஆணையாளர் சார்பாக தாக்கல் செய்து கொடுப்பதற்கு திரு.கண்ணன் GST Practitioner, ஏ.கே.எம்.காம்ப்ளக்ஸ்,சிவகாசி (E.N.331800001840GPU) அவர்களை நியமனம் செய்வதற்கும், அதற்கான கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.2000/- வீதம் வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி மேற்சொன்ன திரு.கண்ணன், சிவகாசி அவர்களை நியமனம் செய்தமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.2000/- வீதம் 01.04.2021 முதல் 31.03.2022 வரை 12 மாதங்களுக்கு மொத்த தொகை ரூ.24000/- வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 4142/2012/அ4

அனுமதிக்கப்பட்டது -மன்ற அனுமதி எண் 1125

24. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் - 2019-2020-ன் கீழ் சிவகாசி நகராட்சி காமாக் ரோடு புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணிக்கு சிவகாசி நகர்மன்றத் தீர்மானம் எண்.901 நாள்-14.02.2020-ன்படி ரூ.10,00,000/- மதிப்பீட்டில் செய்வதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு பணி நடைபெற்று வந்தது. மேற்படி பணியில் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத பணியினை Antiskid tiles பொருத்தும் பணி, HDPE tank பொருத்தும் பணி மற்றும் பைப் லைன்கள் அமைக்கும் பணி, தரை தளத்திலிருந்து Roofslab-க்கான உயரம் கூட்டுவது போன்ற பணிகள் கூடுதலாக செய்வது அத்தியாவசிய தேவையாக இருந்தது. மேற்படி அங்கன்வாடி மையமானது சிறுகுழந்தைகள் படிக்கும் இடமாதலால் குழந்தைகளின் நலன் கருதி குழந்தைகளுக்கு பாதுகாப்பாகவும், தண்ணீர் வசதி மற்றும் காற்றோட்டமாக இருப்பதற்காக மேற்கண்ட பணிகள் செய்யப்பட்டு மொத்த செலவுத் தொகை ரூ.10,56,475/-க்கு பணி செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கான கூடுதல் செலவுத் தொகை ரூ.56,475/-க்கும், மேற்படி செலவுத் தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்-7406/2019/இ1

அனுமதிக்கப்பட்டது - மன்ற அனுமதி எண் 1126

25. சிவகாசி நகராட்சியில் சிறப்பு சாலை திட்டம்-2020-2021-ம் ஆண்டுக்குரிய நகராட்சி சாலைகள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணி ரூ.27.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற உள்ள சாலை மேம்பாட்டு பணிக்கு மாண்புமிகு கே.டி.ராஜேந்திர பாலாஜி பால்வளத்துறை அமைச்சர் அவர்களால் 10.02.2021 அன்று பூமி பூஜை போட்டு துவக்கி வைத்தமைக்கான விளம்பர அறிவிப்பினை மாவட்ட அளவில் தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு கீழ்க்கண்ட விளம்பர நிறுவனங்களுக்கு தொகை ரூ.1,02,217/-ஐ (ரூபாய் ஒரு லட்சத்து இரண்டாயிரத்து இருநூற்றி பதினேழு மட்டும் ) நகராட்சி பொது நிதியில் செலவு செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | விளம்பர நாளிதழின் பெயர் | பட்டியல் எண். | நாள் | தொகை (GST சேர்த்து) ரூ. |
|---|---|---|---|---|
| 1 | தினத்தந்தி | MDU2021-0015298 | 10.02.2021 | 31,185 |
| 2 | தினமலர் | | 10.02.2021 | 38,981 |
| 3 | தினகரன் (KAL PUBLICATIONS (P) LTD. | 3300267168 | 10.02.2021 | 32,051 |
| மொத்தம் | | | | 1,02,217 |

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 2568/ 2021/ இ1
அனுமதிக்கப்பட்டது - மன்ற அனுமதி எண் 1127

26. சிவகாசி நகராட்சிக்கு பொறியியல் பிரிவில் UPS வசதி இல்லாததால் கணினிகள் பழுது ஏற்பட வாய்ப்பு உள்ளது. சிவன் கோவில் வரி வசூல் மையத்தில் பயன்படுத்தப்பட்ட UPS 2KV மற்றும் பேட்டரிகள் (2015ல் வாங்கப்பட்டது) பொறியியல் பிரிவுக்கு பொருத்தப்பட்டது. ஐந்து பேட்டரிகளிலும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே புதிதாக ஐந்து பேட்டரிகள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவு ரூ.50000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்- /2021/இ1
அனுமதிக்கப்பட்டது - மன்ற அனுமதி எண் 1128

27. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அலுவலக உத்திரவு ந.க.எண். 9691/ஜே2/2021, நாள் : 11.05.2021-ல் நகராட்சி பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைக்கு இந்நகராட்சிக்கு ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது. மேற்படி உத்திரவில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான கிருமி நாசினிகள் முகக்கவசம், கையுரை, பாதுகாப்பு உபகரணங்கள், மின் சாதன பொருட்கள், THERMAL SCANNER, PULSE OXY METER ஆகியவை வாங்கி கொள்ள அறிவுறுத்த்ப்பட்டுள்ளது. மேற்படி தடுப்பு நடவடிக்கைக்கு வரப்பெற்றுள்ள நிதி ஒதுக்கீட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைப்பதற்கும், மேலும் மேற்படி கிருமி நாசினிகள் மற்றும் கொரோனா தடுப்பு பாதுகாப்பு உபகரணங்களை ஒப்பந்த நடவடிக்கை ஏதுமின்றி பேரிடர் மேலாண்மை நடவடிக்கையினை கருத்தில் கொண்டு நேரடியாக விநியோகம் செய்து கொள்ளவும் FINANCE ( SALARIES ) DEPARTMENT, SECRETARIAT, CHENNAI-9 Letter No. 74/JS(MA) FINANCE / SALARIES/ 2020, Dated: 01.04.2020. உத்திரவில் தெரிவிக்கப்பட்டுள்ளதையும் மன்றப்பொருள் வைக்க ஆணையாளர் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நிறுவனங்களுக்கு நேரிடையாக விநியோக உத்திரவு வழங்கியமைக்கும், தொகை வழங்கப்பட்டமைக்கும் மன்றம்

அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்: 1856/2020/எச்1**
அனுமதிக்கப்பட்டது - மன்ற அனுமதி எண் 1129

28. இந்நகராட்சியில் ஆண்டுக்கணக்குகள் முடிவு செய்து கணினியில் பதிவு செய்து இணக்கம் செய்வதற்கு பட்டய கணக்கர் (Charted Accountant) துணையுடன் முடிவு செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்டங்களில் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன் படி இந்நகராட்சியில் கணக்குகளை, பட்டயக் கணக்கர் உதவியுடன் 2019-2020ம் ஆண்டுக்கான கணக்கினை முடிப்பதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.40,000/-ற்கும் மேற்படி செலவுத் தொகையினை பொதுநிதியில் இருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :
அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மனறம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 3552/2015/பி2
அனுமதிக்கப்பட்டது - மன்ற அனுமதி எண் 1130

29. இந் நகராட்சி ந.க.எண்.7209/2019/சி1, 15.04.2021-ம் தேதிய சுற்றறிக்கையில் நகராட்சி பழைய கட்டிடத்தில் இருந்த கோப்புகள் மற்றும் ஆவணங்களை தனியரின் வாகனம் மற்றும் கூலியாட்களை வைத்து புதிய கட்டிடத்தில் கொண்டுவந்து சேர்க்க வருவாய் ஆய்வாளருக்கு உத்திரவிடப்பட்டதின்படி, வருவாய் ஆய்வாளர்.திரு.ஆர்.சரவணன் என்பவர் புதிய அலுவலககட்டிடத்திற்கு ஆவணங்கள் மற்றும் கோப்புகளை தனியரின் வாகனத்தில் கொண்டு வந்து சேர்த்தமைக்கு வண்டி வாடகை மற்றும் கூலி தன்னால் கொடுத்த வகைக்கு ரூ.32,500/- வழங்குமாறு கோரியுள்ளார். அதன்படி திரு.ஆர்.சரவணன் வருவாய் ஆய்வாளருக்கு ரூ.32,500/-ஐ பொது நிதியிலிருந்து தொகை வழங்க ஆணை வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2993/2021/அ1
அனுமதிக்கப்பட்டது - மன்ற அனுமதி எண் 1131

30. சிவகாசி நகராட்சியானது 6.89 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடைய சிறப்பு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியானது 33 வார்டுகளையும் 21602 குடியிருப்புகளையும், 30232 வரிவிதிப்பு குடியிருப்புகளையும் கொண்டுள்ளது. மேலும் இந்நகராட்சி பகுதியில் 5876 வணிக நிறுவனங்களும், 530க்கும் மேற்பட்ட பட்டாசு உற்பத்தி தொழிற்சாலைகள், 120க்கும் மேற்பட்ட தீப்பெட்டி உற்பத்தி தொழிற்சாலைகள், மற்றும் 300க்கும் மேற்பட்ட ஆப்செட் மற்றும் பிரிண்டிங் பிரஸ் நிறுவனங்களை கொண்ட தொழில் நகரமாகவும் உள்ளது. மேலும் 71064 (2011 CENSUS) மக்கள் தொகை மற்றும் MID YEAR POPULATION ஆக 99868 மக்கள் தொகையும் இந்நகராட்சி பகுதிகளில் உள்ளது. மேலும் இந்நகராட்சி பகுதிக்கு தினந்தோறும் 20,000க்கும் மேற்பட்ட வந்து செல்லும் மக்கள் (Floating Population) தொகையும் கூடுதலாக உள்ளது. இதனால் தினந்தோறும் குப்பை உற்பத்தியின் அளவு அதிகரித்துக் கொண்டே செல்கிறது.
இந்நகராட்சிக்கு 195 நிரந்தர துாய்மை பணியாளர்கள் பணியிடம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் தற்சமயம் 118 பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். அரசானை எண் 101-ன் படி இந்நகராட்சி 395 பணியாளர்

பணியிடங்கள் அத்தியாவசிய தேவையாக உள்ளது. அதன் அடிப்படையில் இந்நகராட்சிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை எண். K.DIS.No.28369/J3/2018 நாள்: 04.12.2018ல் 259 தூய்மை பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் மூன்று ஆண்டுகள் கொண்ட தொகுப்பு காலத்திற்கு நியமனம் செய்து கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 120 தூய்மை பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் (OUT SOURCING) நியமனம் செய்து கொள்ள 22.10.2019 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு JP VINCIBLE , காஞ்சிபுரம் நிறுவனத்தாருக்கு 08.11.2019ல் பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஒப்பந்ததாரர் நல்லமுறையில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

தற்போது முதலாம் ஆண்டின் பணிக்காலம் 08.11.2020-வுடன் முடிவடைவதால் இரண்டாம் ஆண்டிற்கான ஒப்பந்த காலத்தை 01.11.2020 முதல் 31.10.2021 வரை மேற்கண்ட ஒப்பந்ததாரர் JP VINCIBLE, காஞ்சிபுரம் நிறுவனத்தாருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்ததாரர் JP VINCIBLE , காஞ்சிபுரம் நிறுவனத்தார் பணியாளர் ஊதியம் உயர்த்தி வழங்க கோரியுள்ளதால் தற்சமயம் விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் உயர்த்தி வழங்க கோரியுள்ளார். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அலுவலக கடிதம் எண். K.DIS.No.28369/J3/2018 நாள்: 04.12.2018-ன் உத்திரவின் படியும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி தொகை ஒப்பந்த பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் பணி உத்திரவு நியந்தணையிலும் ஒப்பந்த தூய்மை பணியாளர்களுக்கு அவ்வப்போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் உயர்த்தப்படும் தினக்கூலி அடிப்படையில் ஊதியம் வழங்கவும் உத்திரவிடப்பட்டுள்ளது.

மேலும் விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் NOTIFICATION ROC. A/7/18050, நாள்: 01.11.2019-ன் படி தினக்கூலி நாள் ஒன்றுக்கு ரூ.385/- ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் குறைந்தபட்ச கூலி சட்டத்தின் கீழ் நிர்ணயம் செய்யப்பட்ட தூய்மை பணியாளர்க்கான ( SWEEPER ) Rs.385 வீதம் 01.05.2021 முதல் 31.10.2021 வரையிலான காலத்திற்கு செலவீனம் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 120 நபருக்கு 6 மாதத்திற்கு (120 x 184 x 385 ) | = | Rs. 85,00,800.00 |
| E.P.F. 13% ( EMPLOYER CONTRIBUTION ) | = | Rs. 11,05,104. 00 |
| E.S.I. 3.25% ( EMPLOYER CONTRIBUTION ) | = | Rs. 2,76,276. 00 |
| ADMINISTRATIVE CHARGES 10% | = | Rs. 8,50,080. 00 |
| ஆக கூடுதல் | = | **Rs 1,07,32,260.00** |

உத்தேச செலவினம் - ரூ.1.08 இலட்சம்

**அலுவலகக்குறிப்பு:-** 1. இந்நகராட்சில் தூய்மை பணியாளர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும் , நகரில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை திறம்பட செயல்படுத்த வேண்டியுள்ளதாலும் மேற்படி கூடுதல் செலவினங்களை மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி செலவினங்களை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மேற்படி உயர்த்தப்பட்ட தினக்கூலி ஊதியம் 01.05.2021 முதல் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2870 / 2021 / எச்1 )**

அனுமதிக்கப்பட்டது -மன்ற அனுமதி எண் 1132

31. சிவகாசி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TATA ACE வாகனம் TN-95 C 1823-க்கு 2021-2022 ஆண்டுக்கு தகுதி சான்று பெற வேண்டி

இருப்பதால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுது பணிகளை சரி செய்யவும், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.40,000/-க்கு (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது . மேற்படி தொகையினை பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர் மன்ற தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 2058 / 2021 / எச்2 )**
அனுமதிக்கப்பட்டது - மன்ற அனுமதி எண் 1133

32. சிவகாசி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் டிரெய்லர் வாகனம் TN-67 Z 2901-க்கு 2021-2022 ஆண்டுக்கு தகுதி சான்று பெற வேண்டி இருப்பதால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுது பணிகளை சரி செய்யவும், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.46,000/-க்கு (ரூபாய் நாற்பத்தி ஆறாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது . மேற்படி தொகையினை பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 2684 / 2021 / எச்2 )**
அனுமதிக்கப்பட்டது - மன்ற அனுமதி எண் 1134

33. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018–2019ன் கீழ் சிவகாசி நகராட்சியில் விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தலைவர் அவர்களின் 28.09.2018.ந் தேதிய ந.க.எண்.சி3/3068/2017 எண் செய்ல்முறை ஆனணயின்படி கீழ்க்கண்ட கட்டிடம் கட்டும் பணிக்கு உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மொத்த மதிப்பீடு ரூ (லட்சத்தில்) | பொது நிதி ரூ. (லட்சத்தில்) | சட்டமன்ற உறுப்பினர் ஒதுக்கீட்டுத் தொகை ரூ. (லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | அம்மன் கோவில்பட்டி மேல்நிலைப்பள்ளியில் ஆய்வுக்கூட கட்டிடம் கட்டுதல் | 30.00 | 10.00 | 20.00 |
| 2 | அம்மன் கோவில்பட்டி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள | 9.00 | 4.00 | 5.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | அங்கன்வாடிக்கு புதிய கட்டிடம் கட்டுதல் | | | |

மேற்கண்டவாறு வரப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் நகராட்சி பங்குத் தொகையாக வழங்கப்பட்டி ரூ.14.00 லட்சத்தை, நகராட்சி பொது நிதியில் செய்வதற்கு போதிய நிதி இல்லாத காரணத்தாலும், மேற்கண்ட பணிகள் பள்ளி வளாகத்தில் நடைபெறுவதாலும், நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்வதற்கு பதிலாக கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2275/2020/இ1
அனுமதிக்கப்பட்டது - மன்ற அனுமதி எண் 1135

தனி அலுவலர்,
சிவகாசி நகர்மன்றம்.